# <u>கம்பம் நகராட்சி</u>

**2022-ஆம் ஆண்டு மே மாதம் (20.05.2022) ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அவசரக்கூட்டம்**

## <u>கூட்டப்பொருள்</u>

| | | |
|---|---|---|
| 1. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 22 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 67 பணியாளர்களை வழங்கி வரும் M/s UK Security Service, Chennai என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3767/2019/எச்1 நாள்.29.05.2020-இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.06.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்ப்பார்க்கப்படும் நிலையிலும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s UK Security Service, Chennai நிறுவனத்துடன் 30.04.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படாததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.05.2022 முதல் 31.05.2022 வரை கால நீட்டிப்பு செய்து வழங்கலாம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s UK Security Service, Chennai நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.05.2022 முதல் 31.05.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3767/2019/எச்1) |
| 2 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 11 வார்டுகளில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு 76 பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.4468/2018/எச்1 நாள்.27.02.2020-இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்ப்பார்க்கப்படும் நிலையிலும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd, Chennai நிறுவனத்துடன் 30.04.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படாததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.05.2022 முதல் 31.05.2022 வரை கால நீட்டிப்பு செய்து வழங்கலாம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | பொது சுகாதார நலன் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd, நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.05.2022 முதல் 31.05.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.4468/2018/எச்1) |

| | | |
|---|---|---|
| 3 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதை தடுக்கும் பணிக்கு 63 பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd என்ற நிறுவனத்திற்கு இவ்வலுவலக உத்தரவு ந.க.எண்.3963/2018/எச்1 நாள்.27.02.2020-இல் பணி உத்தரவு வழங்கப்பட்டு 29.02.2020 முதல் பணியை துவங்கி பணி செய்து கடந்த 28.02.2021 உடன் ஒப்பந்தம் முடிவடைந்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரது அறிவுரையின்படி, திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள தேவையான நபர்களுக்கான அளவுகோல் நிர்ணயம் செய்ய முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு நிர்வாக அனுமதி எதிர்ப்பார்க்கப்படும் நிலையிலும், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்த காரணத்தினால் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இறுதி செய்வதற்கு சிறிது காலமாகுமென்பதாலும், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது M/s Relyon Facility Service Pvt Ltd, Chennai நிறுவனத்துடன் 30.04.2022 முடிய ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. தற்போது வரை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரது நிர்வாக அனுமதி பெறப்படாததாலும், பொது சுகாதார நலன் கருதி 01.05.2022 முதல் 31.05.2022 வரை கால நீட்டிப்பு செய்து வழங்கலாம். ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்குவதற்கும் உத்தேச செலவினத்தொகை ரூ.6.00 இலட்சத்திற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | பொது சுகாதார நலன் கருதி பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது பணியாளர்களை வழங்கி வரும் M/s Relyon Facility Service Pvt Ltd, நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை 01.05.2022 முதல் 31.05.2022 வரையில் கால நீடிப்பு செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.3963/2018/எச்1) |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் இயங்கும் 7 நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளின் கழிப்பறைகள் மற்றும் வளாகப்பகுதிகளை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு உரிய பொருட்களுடன் 9 பணியாளர்களை வழங்க 20.04.2022- ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி பெற்ற கீழ்காணும் மூன்று நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | |

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ (ஒரு வருடத்திற்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | Ponmagal Women Self Help Group, Cumbum | நபர் ஒன்றுக்கு ரூ.167376/- | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.38% குறைவு |
| 2 | Vetri Suryan Women Self Help Group, Cumbum | நபர் ஒன்றுக்கு ரூ.167693/- | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% குறைவு |
| 3 | M/s. Industrial Security & Intelligence (India) Pvt. Ltd, Chennai | நபர் ஒன்றுக்கு ரூ.215006/- | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 27.97% குறைவு |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** | வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.38% குறைவாக கொடுத்துள்ள Ponmagal Women Self Help Group, Cumbum நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3398/2016/எச்1) |
| 5 | அரசாணை எண்.166, ந.நி.கு.வ. (MA-IV) துறை, நாள்.23.11.2016-இன்படி கம்பம் நகராட்சிப் பகுதியில் உள்ள 7 நகராட்சி பள்ளிகள் மற்றும் 4 அரசு பள்ளிகளின் வளாகப்பகுதிகள் மற்றும் கழிப்பறைகளை சுத்தம் செய்து பராமரிக்கும் பணியை மேற்கொள்வதற்கு 20.04.2022-ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த விதிகளின்படி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அவர்கள் மூலம் வெ.ஆ.எண்.136/22/செமதொஅ/தேனி, நாள்.04.04.2022-இன்படி, தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.11,844/-க்கு பில் வரப்பட்டுள்ளது. எனவே மேற்படி விளம்பரக்கட்டண தொகை ரூ.11,844/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3398/2016/எச்1) |

6 இந்நகர்மன்ற தீர்மான எண்.22, நாள்.31.03.2022-இல் அனுமதித்துள்ளபடி, கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் முதல்நிலை சேகரிக்கம் பணிக்கு தேவையான BOV வாகனங்கள் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் 33 வார்டுகளிலும் துப்புரவு பணி மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளதால், மேற்படி பழுதடைந்த 11 BOV வாகனங்கள் பழுது நீக்கம் செய்ய 26.04.2022-ஆம் நாள் இரண்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயரும், முகவரியும் | விலை விகிதம் (ஒரு வண்டிக்கு) |
|---|---|---|
| 1 | திரு. செந்தில்குமார்<br>நவீன் ஆட்டோ ஒர்க்ஸ்,கம்பம். | ரூ.58,850/- |
| 2 | திரு. விஜயராகவன்<br>சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,கம்பம் | ரூ.64,500/- |

**அலுவலகக்குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.செந்தில்குமார், நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.571/2022/எச்1)

7 கம்பம் நகராட்சியை குப்பையில்லா நகராட்சியாக அறிவிக்கவும், அதற்கான மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டம் 2.0, குப்பையில்லா நகராட்சி (Garbage Free City 3 Star) சான்றிதழ் பெறுவதற்கு பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை தெரிவிக்கக்கோரி, தினமணி நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. இதனை வெளியீடு செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் தொகை ரூ.6787/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.394/2022/எச்1)

8 கம்பம் நகராட்சி பகுதியில் திறந்த வெளி கழிப்பிடத்தை தவிர்ப்பதற்காக தூய்மை இந்தியா இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி, கம்பம் நகராட்சியை திறந்த வெளி கழிப்பிடமற்ற (ODF+) நகராட்சியாக அறிவிக்க பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகளை தெரிவிக்கக்கோரி, மாலை முரசு நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. இதனை வெளியீடு செய்தமைக்கு விளம்பரக் கட்டணம் தொகை ரூ.3381/- வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.395/2022/எச்1)

9 கம்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், Swachhatam Mis Portal-இல் கம்பம் நகராட்சி எல்லைக்குள் புதிய வார்டு எல்லைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான நகர்ப்புற அடிப்படை கட்டமைப்புகளை (MCC, OCC, Landfills, Bio-gas Plant, RRC, E-waste Collection Centre, C &D Waste Collection Centre etc.,) ஆகியவற்றை GIS Star Rating பெறுவதற்கு அவசியம் என்பதால், கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளுக்கான வார்டு மறுவரையறை (Delimitation Map) செய்யப்பட்ட வரைபடங்களில் Bio-Gas Plant, Resource Recovery Center, E-waste Collection Centre, C &D Waste Collection Centre ஆகியவற்றை GIS மென்பொருளில் தயார் செய்து GFC Star Rating பெறுவதற்காக Google Map -இல் KML File format-இல் தயார் செய்து Online-இல் பதிவேற்றம் செய்வதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.25,000/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.394/2022/எச்1)

10 இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் செய்திட 20.04.2022-ஆம நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | இந்நகராட்சி வார்டு 31 மணிநகர் மேல்நிலைநீர்த்தேக்க தொட்டியில் நீர் வெளியேறும் குழாயின் அளவு (OUT LET) 100mm ஆக உள்ளதை 150mm ஆக மாற்றி அமைக்கும் பணிகள் செய்தல் | 3,50,000 | M.வேல்பாண்டியன் | 0,70 | | |
| | | | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 2.19 | |
| | | 2 | வார்டு 1, சுவாமி விவேகானந்தர் தெரு வடமேற்கு பகுதியான கண்ணுடையார் நகரில் பகிர்மான குழாய் பதித்தல் பணிகள் மேற்கொள்தல். | 4,60,000 | L. ராஜேந்திரன் | 0.004 | | |
| | | | | | V. கிருஷ்ணன் | | 1.54 | |
| | | 3 | வார்டு 27, பொதுப்பணித்துறை அலுவலகம் முன்பு மற்றும் வார்டு 10, தாத்தப்பன் குளம் 2 வது சந்து மற்றும் 4வது சந்து பகிர்மான குழாய் பதித்தல் பணிகள் மேற்கொள்தல். | 1,10,000 | M.வேல்பாண்டியன் | 0.62 | | |
| | | | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 1.21 | |
| | | 4 | வார்டு 25, நந்தகோபால் சாமி கோவில் முன்பு, வார்டு 15, ஓடைக்கரைத்தெரு சூப்பர் ஸ்டோர் அருகில் ஒடைகரை தெரு மற்றும் சுங்கம் தெரு சந்திப்பு மற்றும் நாட்டாண்மை நாராயணன் தெரு சந்திப்பு ஆகிய இடங்களில் சுலீஸ் வால்வுகள் புதிதாக பொருத்தும் பணிகள் மேற்கொள்தல். | 1,90,000 | M.வேல்பாண்டியன் | 1.39 | | |
| | | | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 16.84 | |
| | | 5 | வார்டு 31, காந்தி நகர் தொட்டி வளாகம் காந்தி நகர் தொட்டி வளாகம் வெளிப்புறம், காந்தி நகர் மற்றும் எல்.எப் ரோடு சந்திப்பு, வார்டு 22 குலாளர் தெரு மற்றும் வார்டு 24 KVR தெரு ஆகிய இடங்களில் சுலீஸ் வால்வுகள் புதிதாக பொருத்தும் பணிகள் | 1,60,000 | M. வேல்பாண்டியன் | 0.78 | | |
| | | | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 1.41 | |
| | | 6 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் கசிவுகள் குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் சரி செய்யும் பணி | 9,80,000 | L. ராஜேந்திரன் | 1.79 | | |
| | | | | | V. கிருஷ்ணன் | | 2.42 | |
| | | 7 | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் உள்ள குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் | 9,80,000 | R. சபீர்அலி | 0.76 | | |
| | | | | | A.P. | | 0.85 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கசிவுகள் குடிநீர் விநியோக வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் சரி செய்யும் பணி | | கன்ஸ்ட்ரக்சன் | | |
| 8 | லோயர் கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு பொருத்தப்பட்ட கேஸ் குளோரினேசன் பிளான்ட்டில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல். | 5,70,000 | ஸ்ரீ சத்யா டைல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் | -0.34 | |
| | | | பீபுல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ் | | 6.78 |
| 9 | இந்நகராட்சியில் வார்டு எண்.3, சங்கிலி நகர் முதல் கிழக்கு தெரு குடியிருப்பு விரிவாக்க பகுதிக்கு பகிர்மான குழாய் பதித்தல் பணி | 50,000 | M.வேல்பாண்டியன் | 1.08 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 3.73 |
| 10 | இந்நகராட்சியில் 33 வார்டுகளிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க பயன்படும் ஹைட்ராலிக் ஈப்பு வாகனம் TN50T 7497 க்கு தகுதி சான்று பெற உரிய மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 35,000 | ஆர். ராஜேந்திரன் நவீன் ஆட்டோ ஓர்க்ஸ் | 1.20 | |
| | | | விஜய் ராகவன் சின்சியர் ஆட்டோ மொபைல்ஸ் | | 2.92 |
| 11 | இந்நகராட்சியில்அலுவலகத்தில் கணினி செயல்பாடுகளுக்கு தடையில்லா மின்வழங்கிக்கு உரிய மின்கலப்பெட்டி செயல் இழந்ததால் புதிதாக மின்கலப்பெட்டிகள் சப்ளை செய்யும் பணி | 2,60,000 | ஸ்ரீதுர்கா பேட்டரீஸ் | 0.37 | |
| | | | A.M.R பேட்டரீஸ் | | 0.74 |
| 12 | இந்நகராட்சி வார்டு 25 நந்தகோபால் சாமி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் 15வது நிதிக்குழு திட்டம் 2020-2021-இன்கீழ் புதிதாக கட்டப்பட்ட 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டமேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீரேற்றம் செய்யும் பொருட்டு குழாய் அமைப்பு பணிகள் (PIPE INTER LINK CONNECTION WORK) செய்யும் பணி | 8,00,000 | R. சபீர்அலி | 0.11 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 0.51 |
| 13 | இந்நகராட்சியில் வார்டு எண்.32, நந்தகோபால் சாமி நகர் குடியிருப்பு விரிவாக்க பகுதிக்கு பகிர்மான குழாய் பதித்தல் பணி | 70,000 | எல்.ராஜேந்திரன் | 0.26 | |
| | | | வி. கிருஷ்ணன் | | 0.69 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | நகரில் 33 வார்டுகளிலும் உள்ள அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல். | 1,00,000 | எல்.ராஜேந்திரன் | 0,04 | |
| | | | வி. கிருஷ்ணன் | | 0.66 |
| 15 | லோயர்கேம்ப் நீரேற்று நிலையத்தில் உள்ள இரண்டு 75 குதிரை திறன்மின் மோட்டார்கள், மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையத்தில் 10 எச்.பி., 30 எச்.பி., 60 எச்.பி., என 8 மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்தல் | 6,50,000 | R. சபீர்அலி | 0.19 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 1.12 |
| 16 | நகரில் 1 முதல் 17 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசை மோட்டார்கள் மற்றும் பொது கழிப்பறைகள் இதர பயன்பாடுகளுக்குரிய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி | 9,60,000 | எல்.ராஜேந்திரன் | 0.61 | |
| | | | வி. கிருஷ்ணன் | | 1.16 |
| 17 | நகரில் 18 முதல் 33 வார்டுகளிலும் பொதுமக்களின் தண்ணீர் தேவைக்காக நிறுவப்பட்ட சிறு மின் விசை மோட்டார்கள் மற்றும் பொது கழிப்பறைகள் இதர பயன்பாடுகளுக்குரிய மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உரிய பொருட்களுடன் வருடாந்திர பராமரிப்பு பணி | 9,60,000 | R. சபீர்அலி | -1.18 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 0.23 |
| 18 | லோயர்கேம்ப் மற்றும் சுருளிப்பட்டி நீரேற்று நிலையங்களில் குடிநீர் விநியோகத்திற்கு தேவையான கேஸ் | 6,70,000 | ஸ்ரீ சத்யா டைல்ஸ் அன்ட் கெமிக்கல்ஸ் | -0.39 | |
| | | | பீபுல் | | 1.96 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குளோரினேசன் சிலிண்டர் வாங்குதல் | | கெமிக்கல் இன்டஸ் ரீஸ் | | |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** | வரப்பட்ட 18 பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். |

**11** இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் செய்திட 27.04.2022-ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|---|---|
| | | | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1 | இந்நகராட்சியில் சுருளிப்பட்டி குடிநீரேற்று நிலையத்தில் ஆற்றினுள் அமைக்கப்பட்ட இரண்டு உறை கிணற்றில் தற்போது வரை தூர்பாராததால் நீர் வடிகட்டி முறையில் தொட்டியில் சேகரமாகும் நீரின் அளவு குறைவதால் உறை கிணற்றுக்குள் உள்ள குறு மண் கழிவுகளை அப்புறப்படுத்தும் பணிகள் செய்தல். | 4,00,000 | M. வேல்பாண்டியன் | – 0.09 | |
| | | | A.P. கன்ஸ்ட்ரக்சன் | | 1.05 |
| 2 | இந்நகராட்சியில் வார்டு எண்.1 கோம்பை ரோடு,கோம்பை ரோடு வடக்கு 1-வகு குறுக்கு தெரு, 2-வது குறுக்குத்தெரு, 3-வது குறுக்குத்தெரு மற்றும் R.R. நகர் தெற்று 3-வது குறுக்கு தெரு ஆகிய குடியிருப்பு விரிவாக்க பகுதிகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பொருட்டு 90 mm PVC பகிர்மான குழாய்கள் அமைத்தல் பணி | 2,70,000 | எல்.ராஜேந்திரன் | 0.26 | |
| | | | வி. கிருஷ்ணன் | | 1.00 |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** | வரப்பட்ட 2 பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம். |

**12** கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் (KNMT) திட்டத்தின்கீழ், கம்பம் நகராட்சி வாரச்சந்தையினை நவீன கட்டமைப்புகளுடன் மேம்படுத்துதல் ரூ.775.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதன்படி, மேற்கண்ட பணிக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி அவர்களின் வெளியீட்டு ஆணை எண்.541/செ.ம.தொ.அ/2022, தேனி, நாள்.28.01.2022 வழியாக கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.2,63,235/-ஐ (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து இருநூற்று முப்பத்தைந்து மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் - ரூ.230700.00
2) மாலை முரசு - ரூ. 20000.00

-------------------------

ரூ.2507000.00

CGST @ 2.50% ரூ. 6267.50

SGST @ 2/50 % ரூ. 6267.50

-----------------------------

**மொத்தம் ரூ.263235.00**

-------------------------

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

**13** இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.TN 60 X 0499 -க்கு மராமத்து பணிகள் செய்திட 29.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | விலைப்புள்ளிதாரர் பெயர் | மதிப்பீட்டு விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி ஈப்பு எண் TN 60 X 0499 -க்கு மராமத்து பணிகள் செய்தல் | 1) திரு.பி. முருகன் ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பம் | 0.46% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | 2) ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஓர்க்ஸ், சி.எம்.எஸ் நகர், கம்பம். | 0.63% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.46% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.573/2022/எச்1)

**14** தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 - 2021-2022-இன்கீழ் கீழ்கண்ட சமுதாயக்கூடங்கள் ரூ.49.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் செய்திட பார்வை 1-இல் காணும் சென்னை, நகராட்சி நிர்வாக **ஆணையர்** அவர்களின் ந.க.எண்.5990/2022/SBM 11.04.2022-ஆம் தேதிய கடிதம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணிவிவரம் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி வார்டு எண்.3 சங்கிலி நகர் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் பின்புறம் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 24.96 |
| 2 | கம்பம் நகராட்சி வார்டு எண்.14, டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள நகராட்சி | 24.96 |

| | | | |
|---|---|---|---|
| | | வசூல் மையத்திற்கு அருகில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | |
| | | **மொத்தம்** | **49.92** |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** | மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.751/2022/இ1) |
| 15 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள பூங்காக்கள், திறவிடங்கள் மற்றும் விளையாட்டு திடல் அடங்கிய பட்டியல் அரசிதழில் பிரசுரம் செய்யும் பொருட்டு ஆட்டோகேட் (Autocade) முறையில் 5 பிரதிகள் தயார் செய்து தர உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு.<br>1) அன்னை கன்ஸ்ட்ரக்சன்ஸ் — ரூ.44500.00<br>2) அம்பிகை கன்ஸ்ட்ரக்சன்ஸ் — ரூ.38500.00<br>வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2-இல் குறிப்பிடப்பட்டுள்ள அம்பிகை கன்ஸ்ட்ரக்சன் விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.1897/1999/எப்1) |
| 16 | கம்பம் நகராட்சி வார்டு எண்.17 நந்தகோபால்சாமி மேற்கு தெருவில் 2003-2004-ஆம் ஆண்டில் பொதுமக்கள் நலன் கருதி ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது. அதன்பிறகு மத்திய அரசின் அனைத்து வீடுகளுக்கும் தனிநபர் கழிப்பறை கட்டும் திட்டத்தின் கீழ், இப்பகுதி மக்கள் தத்தம் வீடுகளுக்கு கழிப்பறை கட்டியதால், மேற்காணும் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் பயன்பாடற்று இருந்து வருகிறது. மேலும், கம்பம் நகராட்சிக்கு சொந்தமான ஆலமரத்து நடுநிலைப்பள்ளி தனியார் கட்டிடத்தில் வாடகைக்கு இயங்கி வருகிறது. தற்போது அரசாணை (நிலை) 71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.09.2021 மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.27519-35/2021/பி2, 30.03.2022 -ஆம் தேதிய கடிதத்தில் கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நந்தகோபாலன் கோவில் மேற்கு தெருவில் உள்ள ஆலமரத்து நடுநிலைப்பள்ளியில் 4 வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே சுகாதார வளாகக்கட்டிடம் 25.00 மீ x 35.00 மீ (375 ச.மீ) பரப்பளவுள்ள கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2191/2022/இ1) |
| 17 | கம்பம் நகராட்சி வார்டு எண் 24, கொண்டித்தொழு தெருவில் அமைந்துள்ள 3000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத்தொட்டி கட்டப்பட்டு சுமார் 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகி மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே மேற்காணும் குடிநீர் மேல்நிலைத் தொட்டியினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.758/2022/இ1) |
| 18 | கம்பம் நகராட்சி அலுவலகக் கட்டிடத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்ட அரங்கம், நகர்மன்றத்தலைவரின் அறை மற்றும் நகர்மன்ற உறுப்பினர் அறைகளில் புதிதாக வர்ணம் பூச்சு கழிப்பறை கோப்பைகள், தண்ணீர் வசதி போன்ற மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,80,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.758/2022/இ1) |

| | | |
|---|---|---|
| 19 | கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்-18-இல் மஞ்சனக்காரத்தெரு, கதவு எண்.15/18 கொண்ட கட்டிடத்தின் உரிமையாளர் திரு.பி. நிஷார் அகமது என்பவர் நகராட்சியின் அனுமதி ஏதுமின்றி கட்டிடத்தின் முதல் தளத்தில் மல்லிகை அச்சகம் என்ற பெயரில் 1/2 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார் மூலம் மூன்று இயந்திரங்களை இயக்கி வருவதாகவும், மேற்படி இயந்திரங்களை நிறுத்துவதற்கு திரு.மு. ஜெகநாதன் என்பவர் டபிள்யூ பி.(எம்டி) எண்.18445/2018 மூலம் வழக்கில் பிரதிவாதிகளான 1) அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9, 2) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28, 3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை-16, ஆகியோர்களை வழக்கிலிருந்து நீக்கம் செய்வதற்கும் (Deletion Petition) மேல்நடவடிக்கை தொடரவும் வழக்கு கட்டணமாக வழக்கறிஞர் திரு.கே. ஹேமகார்த்திகேயன் அவர்கள் வழக்கு கட்டணம் தொகை ரூ.10,000/- ஐ வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3097/2016/எச்1) |
| 20 | இந்நகராட்சி ஆணையாளர் குடியிருப்பில் இரவு நேரங்களில் மின் தடை ஆகும் நேரத்தில் UPS வசதி இல்லாததால் மிகவும் சிரமமாக உள்ளதால் புதியதாக 1100W/150Ah/12V திறனில் தடையில்லா மின் வழங்கி ஒன்று வாங்கி பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.22000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | | 2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.835/2022/இ2) |
| 21 | இந்நகராட்சியில் 01/2020-ஆம் மாதம் முதல் 03/2022-ஆம் மாதம் முடிய, தெருவிளக்கு மற்றும் மின் தொடர்பான பணிகளுக்கு பராமரிப்பு பணிகள் செய்து கழற்றப்பட்ட பழைய பயன்படுத்த இயலாத கழிவு மின் பொருட்கள் அலுவலக இருப்பில் உள்ளதை பொது ஏல/ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மூலம் அப்புறப்படுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| 22 | இந்நகராட்சியில் முகைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தற்போது விரிவாக்க புதிய வகுப்பறை கட்டிடங்கள், கணினி ஆய்வகம், குளிர்சாதன வசதியுடன் கணினி வழி கற்றல் வகுப்புகள் ஆகிய பயன்பாட்டிற்காக தற்போது பள்ளி வளாகத்தில் 560 003 479 எண்ணுள்ள ஒரு முனை மின் இணைப்பு மட்டுமே பயன்பாட்டில் உள்ளது. ஒரு முறை மின் இணைப்பில் 4 கிலோவாட் மின் நுகர்வுக்கு மேல் பயன்படுத்த முடியாத நிலை இருப்பதால், பள்ளி வளாகம் முழுவதும் மின்சாரம் பயன்படும் வகையில் ஒருமுனை மின் இணைப்பை மும்முனை மின் இணைப்பாக மாற்றம் செய்து கூடுதல் மின்பளு பெற உரிய மதிப்பீட்டு தொகை மின் வாரியத்திற்கு செலுத்தவும், மும்முனை மின் இணைப்பு பணிகள் செய்யவும் தயார் செய்த மதிப்பீடு ரூ.70,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | 1)மன்றம்அனுமதிக்கலாம். |
| 23 | இந்நகராட்சியில் வார்டு எண்.7 சுவாமி விவேகானந்தர் குறுக்குத்தெருகுடியிருப்பு விரிவாக்க பகுதி என்பதால் குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் இல்லாததால் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி பகுதியில் பொது மக்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் பொருட்டு 90mm PVC பகிர்மான குழாய் அமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.75,000/- குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | |
| | **அலுவலகக்குறிப்பு:** | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | | 2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.703/2022/இ2) |
| 24 | இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையானது 01.04.2021 முதல் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இந்த இனத்திற்கான பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கடந்த 13.08.21, 15.09.21, 29.09.21, 21.10.21, 11.11.21, 24.11.21, 10.12.21, 06.01.22, 13.01.22, 21.01.22 மற்றும் 06.04.22 வரை 11 முறை பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் முன்வைப்புத்தொகை செலுத்தி பொதுஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை தொடர்ந்து | |

06.04.22 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்ற விவரம் கீழ்கண்டவாறு,

| வ.எண் | ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் திரு | ஒப்பந்தப் புள்ளி கோரிய தொகை (ரூ) | 2021-22 ஆம் ஆண்டு துறை ரீதியாக வசூலிக்கப்பட்ட தொகை (ரூ) | முன்றாண்டு சராசரித் தொகை (ரூ) | கூடுதல்/ குறைவு விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 1) | ஜெ.நாகராஜா சிறைப்பாறை | 15,50,000/- | 377785/- | - | 1172215 | கூடுதல் |
| | | | - | 1284338- | 265662 | கூடுதல் |

மேற்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலனை செய்யப்பட்டு நிதியிழப்பினை தவிர்க்கும் வகையில் மறுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் நாள் 20.04.22, 29.04.22 மற்றும் 06.05.22 இல் கேட்கப்பட்டதில் 06.05.2022 அன்று ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்ற விவரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்தப் புள்ளி கோரியவரின் பெயர் (திரு) | ஒப்பந்தப் புள்ளிகோரிய தொகை (ரூ) | 2021-22 ஆம் ஆண்டு துறைரீதியாக வசூலிக்கப் பட்டதொகை( ரூ) | முன்றாண்டு சராசரித் தொகை (ரூ) | கூடுதல்/ குறைவு விவரம் | |
|---|---|---|---|---|---|---|
| 2) | டி.வாசிமலை உசிலம்பட்டி | 20,05,000/- | 377785/- | - | 1627215 | கூடுதல் |
| | | | - | 1284338- | 720662 | கூடுதல் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் திரு டி.வாசிமலை அவர்களால் 2021-22ஆம் ஆண்டு குத்தகைத்தொகை மற்றும் மூன்றாண்டு சராசரித்தொகையினை விட உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையாக ரூ.20,05,000/- கேட்டுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**: இந்த குத்தகை இனத்திற்கு தொடர்ந்து 14 முறை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் கேட்கப்பட்டும் முன்வைப்புத்தொகை செலுத்தி பொதுஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. இக்காலகட்டங்களில் உலகளாவிய கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக வாரச்சந்தை மூடப்பட்ட காரணங்களால் சந்தைக்கு அதிகஅளவில் வருகைதந்த கேரளா மாநில வியாபாரிகள் பல்வேறு காரணங்களால் வருகை நின்றுவிட்டதாலும், பெரும்வியாபாரிகள் வாரச்சந்தையில் கடைகள் அமைப்பதை தவிர்த்து விட்ட நிலையில் கம்பம் அருகில் கூடலுர் மற்றும் உத்தமபாளையத்தில் புதிதாக வாரச்சந்தைகள் திறக்கப்பட்ட காரணத்தினால் வருவாய் தொடர்ந்து சரிந்து வருகின்றது. மேலும் இந்த வசூல்பணிக்கு ஆகும் பணியாளர் செலவினம்

வாரம் ஒன்றுக்கு 4 நபர்களுகான செலவினம் ரூ. 4871/-

ஒருமாதத்திற்கு 4 வாரம் = **4871 x4 = 19484/-**

துறைரீதியான செலவினம்

1 வருடத்திற்கு ரூ. 19484 x 12 = 2,33,808/-

ஆகின்றது.ஆகவே இப்பணிக்கு பணியாளர்கள் நியமித்து தொடர்ந்து வசூல் செய்வதன் மூலம் தனியே செலவினம் ஏற்படும் என்பதாலும், தற்போது வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் தொடங்கப்படவுள்ள காரணத்தினாலும், கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்பணம் செலுத்தி ஏலம் கோர யாரும் முன்வராத நிலையில் தொடர்ந்து நிதியிழ்ப்பினை தவிர்க்கும் வகையில் திரு. டி.வாசிமலை த/பெ தேவசாமி கருத்தட்டான்பட்டி உசிலம்பட்டி (தாலுகா) என்பவரின் உயர்ந்தபட்ச தொகையான ரூ.20,05,000/- ற்கான ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 25 | இந்நகராட்சி சார்பில் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்நோயாளிகள் உடன் வருவோர் தங்குவதற்காக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு தனி மின் இணைப்பு வழங்க மின் வாரியம் முன்வராததால், அரசு மருத்துவமனை மின் இணைப்பிலிருந்து துணை அளவுமானி மூலம் மேற்படி கட்டிடத்திற்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி கட்டிடத்திற்கு தனி மின் இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்து வருவதால் நகராட்சி பராமரிப்பில் உள்ள அம்மா உணவக மின் இணைப்பிலிருந்து நகராட்சியின் பராமரிப்பில் உள்ள உள்நோயாளிகள் உடன்வருவோர் தங்கும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு செய்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.13,200/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.898/2022/இ2) |

26) அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022-இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கீழ்கண்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி /காலிமனை வரியினை பொது சீராய்வு மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.26, நாள்.11.04.2022-இல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**சொத்துவரி: குடியிருப்பு கட்டடங்கள் (Residential Building):**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| < =600 | 1.25 |
| 601-1200 | 1.50 |
| 1201 - 1800 | 1.75 |
| >1800 | 2.00 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள் (Non Residential Building):**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1) | 600 சதுர அடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும். |
| 2) | 601 முதல் 1200 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும். |
| 3) | 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும். |
| 4) | 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும். |
| 5) | வணிகப்பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும். |
| 6) | தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்பட வேண்டும். |

**காலிமனை வரி சீராய்வு :**

காலிமனை வரிவிதிப்பிற்கு 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை

மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனைவரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | குடியிருப்பு | | | |
|---|---|---|---|---|---|
| | | <=600 | 601-1200 | 1201 - 1800 | >1800 |
| | | 1.25 | 1.50 | 1.75 | 2 |
| A | 1.25 | 1.56 | 1.88 | 2.19 | 2.50 |
| B | 0.85 | 1.06 | 1.28 | 1.49 | 1.70 |
| C | 0.45 | 0.56 | 0.68 | 0.79 | 0.90 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | வணிகம் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது வணிக பயன்பாடு கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (+) |
| A | 3.75 | 7.50 |
| B | 2.55 | 5.10 |
| C | 1.35 | 2.70 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | தொழிற்சாலைகள் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போதுகட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 1.87 | 3.27 |
| B | 1.27 | 2.22 |
| C | 0.67 | 1.17 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரிகள் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டிடங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*1.75) |
| A | 1.87 | 3.27 |
| B | 1.27 | 2.22 |
| C | 0.67 | 1.17 |

| மண்டலம் | பழைய மண்டல மதிப்பு | காலியிடம் |
|---|---|---|
| | | வரிசீராய்வின் போது காலிமனை இனங்களுக்கு உயர்த்தப்படும் மண்டல மதிப்பு (*2) |
| A | 0.30 | 0.60 |
| B | 0.20 | 0.40 |
| C | 0.15 | 0.30 |

மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்ட விவரங்களுக்கு நகர்மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பொது சீராய்வு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இதனை பொதுமக்கள் அறியும் வகையில் தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை வாயிலாக 13.04.2022 தமிழ்சுடர் நாளிதழ், தினமணி ஆகிய நாளிதழ்கள் மற்றும் Tricity Mirror ஆங்கில நாளிதழில் செய்தி வெளியிட்டும், அலுவலக விளம்பர பலகையிலும் அறிவிப்பு வெளியிடப்பட்டு மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உயர்வு செய்யப்படும் காரணிகளின் மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டமைக்கு ஆட்சேபணைகள் ஏதுமிருப்பின் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கம்பம் நகராட்சி ஆணையருக்கு சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டவாறு 30 நாட்களுக்குள் பொதுமக்கள் மற்றும் இதர

தொழில் நிறுவனங்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் எதுவும் வரப்பெறவில்லை. எனவே 11.04.2022 தேசிய நகர்மன்ற கூட்ட தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டவாறு 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்ளவும். இதில் நிர்ணயம் செய்யப்பட்ட மண்டல மதிப்பினை உறுதி செய்தும், அதற்கான அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**மன்றம் அனுமதிக்கலாம்.

**27** கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நிதிநிலை அறிக்கை 2021-2022-ஆம் ஆண்டின் அறிக்கை எண்.14 மற்றும் அரசாணை எண். (MS).No.71 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.09.2021-இன்படி, நமக்கு நாமே திட்டம் 2021-2022 - இன்கீழ், கீழ்கண்ட பணிகள் செய்திட 20.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 12 மொஹைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் முதல் தளத்தில் ஆய்வகம் கட்டுதல். | 10,00,000/- | திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் | - | 0.04 % |
| | | | திரு.ஆர்.சபீர் அலி, கம்பம் | 1.89 % | - |

**அலுவலகக்குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 0.04% சதவிகிதம் குறைவாக வழங்கியுள்ள திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2191/2022//இ2)

**28** கம்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரக்கோரி திரு.மா.வேல்பாண்டியன் த/பெ, ப.மாரிமுத்து, 30பி/21, குட்டியாபிள்ளை தெரு, கம்பம் என்பவரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்படி மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் 2022-2023 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் பதிவு செய்ய அனுமதிக்கலாம். (ந.க.எண்.745/2022/இ1)

**29** கம்பம் நகராட்சி வார்டு எண்.12, மொஹைதீன் ஆண்டவர்புரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் தெற்கு பக்கம் உள்ள பழைய கட்டிடத்தின் முதல் தளத்தில் ஆய்வகம் கட்டும் பணிகள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**30** கம்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் ஒப்பந்ததாரராக பதிவு செய்து தரக்கோரி திருபெ. முருகன் த/பெ, பெரியாண்டி தேவர், 8/4, சுக்காங்கல்பட்டி மெயின் ரோடு, கூடலூர் என்பவரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. அதன்பேரில் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டதில் மேற்படி மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் 2022-2023 ஆம் ஆண்டு முதல் 5 ஆம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

ஒப்பந்ததாரர் பதிவு செய்ய அனுமதிக்கலாம். (ந.க.எண்.745/2022/இ1)

**31**

இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து 23.09.2014 முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள 8 மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட 2022-2023-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்த பணிக்காலம் 30.04.2022-இல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 1 மாத காலத்திற்கு 01.05.2022 முதல் 31.05.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.77,000/-க்கு (ரூபாய் எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 568 | 51120 |
| 2 | காவலர் 1 நபர் | 30 x 1 = 30 | 426 | 12780 |
| | | | மொத்தம் | 63900 |

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-இன் கீழ மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.579/2021/இ2)

**32**

இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020-ஆம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண்.1136/2020/இ2, நாள்.01.12.2020-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2. நாள்.22.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 1 மாத காலத்திற்கு 01.05.2022 முதல் 31.05.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 636 | 57240 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Fitter bed Operator) 3 நபர் | 30 x 3 = 90 | 713.70 | 64233 |
| 3 | காவலர் 12 நபர் | 30 x 12 = 360 | 385 | 138600 |
| | | | மொத்தம் | 260073 |

**அலுவலகக்குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி 2022-2023-இன் கீழ மேற்கொள்ளவும் மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.1136/2020/இ2)

இடம் :கம்பம்
நாள் :

நகர்மன்றத்தலைவர்
கம்பம் நகராட்சி.